DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | தீபக் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அண்ணத்துரை | சமயம் | - | |
| கிராமம் | - | நடுமலை நார்த் டிவிசன் | வயது | - | 29/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-02-2026</u>**

**(2.ம் எதிரி ஆஜர்1-ம் எதிரி ஆஜரில்லை.)**

**(1-ம் எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரவிசாம்சன் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **( 1-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம்மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சென்ற வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் வால்பாறை காவல் நிலைய போலீசார் நடுமலையில் வந்து 4 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் அதில் ஆஜர் எதிரியும் இருந்தார். அந்த 4 நபர்களில் ஒருவரிடமிருந்து பொருட்களை வாங்கினார்கள். அந்த நபர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரியிடமிருந்து அந்த பொருட்களை வாங்கவில்லை.(2-ம் எதிரி ஸ்ரீராம் ஆஜரில் இருந்தார்) பொருட்களை கொடுத்த நபரின் பெயர் எனக்கு தெரியாது. ஸ்பீக்கர், மொபைல் போன்ற 4 பொருட்களை வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வதுசாட்சிகையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் மற்றொரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த மற்றொரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வதுசாட்சிகையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த ந பர் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்கள்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | சேகர் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மாடசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | நடுமலை எஸ்டேட் தெற்கு டிவிசன் | வயது | - | 56/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-02-2026</u>**

**(2.ம் எதிரி ஆஜர்1-ம் எதிரி ஆஜரில்லை.)**

**(1-ம் எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரவிசாம்சன் என்பவரை தெரியும். அவர் நான் வேலை செய்யும் எஸ்டேட்டில் கள அதிகாரியாக இருந்தார். என்னிடம் காட்டப்படும் 1-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **( 1-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சென்ற வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் அ.சா.1 வீட்டில் திருட்டு போனதாக கேள்விப்பட்டேன். போலீசாரிடம் அ.சா.1 புகார் அளித்திருந்தார். போலீசார் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். அ.சா.1 னுடன் புகார் கொடுக்க வந்ததற்காக மேற்படி கையொப்பத்தை வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல்**

**மகஜரில் உள்ள 1-வதுசாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**என்னிடம் காட்டப்படும் மற்றொரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த மற்றொரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வதுசாட்சிகையொப்பம் மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**அந்த கையொப்பம்மும் புகார் கொடுத்த அன்றே அப்போதே காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 11-11-2024-ம் தேதி வால்பாறை காவல் நிலைய போலீசார் வால்பாறை டவுன் கடை வீதி ரவி மளிகை கடை அருகில் விசாரித்துக்கொண்டிருந்தபோது போலீசார் என் முன்பாகவும், தீபக் என்பவரின் முன்பாகவும் எதிரிகள் குகநாதன் மற்றும் ஸ்ரீராம் ஆகியோர்களை கைதுசெய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது 1-ம் எதிரி குகநாதன் தாமாக முன்வந்து எங்கள்முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் அன்றைய தினமே 14.20 மணிக்கும், 15.10 மணிக்கும் 1-ம் எதிரியிடமிருந்து தடய பொருட்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், தீபக் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்றுசொன்னால் சரியல்ல.
**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.